DEPOSITION OF WITNESS
IN THE I ADDITIONAL DISTRICT COURT (PCR),
TIRUCHIRAPPALLI.
**Spl.S.C.No. 13 / 2019**
**P.W.4**

| | | |
|---|---|---|
| Name | : | திரு. புஷ்பராஜ் |
| Father's Name | : | திரு. சின்ன குழந்தை |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 42 |

(Accused No.2 is present. A1 and A4 are absent. Petition filed and allowed)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 1st day of June 2026.

**முதல் விசாரணை**

நான் முத்தியம்பாளையத்தில் குடியிருந்து வருகிறேன். குற்ற முறையீட்டாளர் கீதாவையும், அவரது கணவரையும் எனக்கு தெரியும். அவர்கள் எனது பக்கத்து காட்டில் குடியிருந்து வருகிறார்கள். அவர்கள் இந்து பறையர் வகுப்பை சேர்ந்தவர்கள் ஆவார்கள். நான் இந்து முத்துராஜா வகுப்பை சேர்ந்தவராவேன். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 2017ம் வருடம் தேதி நினைவில்லாத ஒருநாள் மாலையில் சுமார் 4.00 மணிக்கு நான் மாடு மேய்த்துக் கொண்டு இருந்தேன். செல்வராஜ் மற்றும் கீதாவின் காட்டில் துவரை மற்றும் சோளம் பயிர் செய்திருந்தார்கள். சோளக்காட்டில் செல்வராஜ், கீதா, செல்வராணி மற்றும் ஆராயி ஆகியோர் களை எடுத்துக் கொண்டு இருந்தார்கள். ஆஜர் எதிரியும் அவருடன் 4 நபர்களும் வந்து உழவு ஓட்டினார்கள். அந்த துவரை காட்டிலும் சோளக் காட்டிலும் உழவு ஓட்டினார்கள். அதை கீதா போய் தேக்கினார். கீதாவின் முடியை பிடித்து, பற தேவடியாமகளே உனக்கு ஏது காடு

என்று வந்தவர்கள் அடித்தார்கள். செல்வராஜ் தேக்கினார். அவரை தடியால் அடித்தார்கள். நான் மாடுகளை கட்டுவதற்கு வீட்டிற்கு போய்விட்டேன். நான் திரும்பி வந்து பார்த்தபோது, காடு உழவு ஓட்டிய நிலையில் இருந்தது. தொட்டி மற்றும் பாத்திரங்களை உடைத்து இருந்தார்கள். கடப்பாறை, மண்வெட்டி மற்றும் கோழியை எடுத்து சென்றுவிட்டார்கள். நான் கேட்டபோது செல்வராஜும், கீதாவும் மருத்துவமனைக்கு சென்றதாக சொன்னார்கள். அதன்பின்னர் சிறிது நாட்கள் கழித்து வந்துவிட்டார்கள், தற்போது வரை அங்குதான் இருக்கிறார்கள்.

**<u>குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்)</u>**

எனது காட்டிற்கும், கீதாவின் காட்டிற்கும் இடைப்பட்ட தூரம் சுமார் எத்தனை அடி இருக்கும் என்றால் எனக்கு அடி அளவுகள் தெரியாது. சுமார் 4 பர்லாங் தூரம் இருக்கும். நான் எனக்கு சொந்தமான காட்டில்தான் அன்று மாடு மேய்த்துக் கொண்டிருந்தேனா என்றால் செல்வராஜ் காட்டிற்கு பக்கத்துக் காட்டில் மாடு மேய்த்து கொண்டு இருந்தேன். நான் மாடு மேய்த்து கொண்டிருந்த இடத்திற்கும் செல்வராஜ் களை வெட்டி கொண்டிருந்த இடத்திற்கும் இடைப்பட்ட தூரம் ஒரு காடு இருக்கும். ஒரு காடு தூரம் என்பது சுமார் 50 அடி தூரம் இருக்கும். அன்றைய தினம் வந்ததாக சொல்லக்கூடிய 4 நபர்கள் பெயர் தற்போது வரை கூறவில்லை. அவர்கள் பெயர்களையும் நான் கேட்டு தெரிந்து கொள்ளவில்லை. அன்றைய தினம் உழவு ஓட்டியதாக சொல்லப்படும் வண்டியின் நம்பர் தெரியாது. செல்வராஜ் மற்றும் கீதா தேக்கியதாக சொல்லும்போது நான் பக்கத்தில் வந்துவிட்டேன். ஆனால் எதையும் தேக்கவில்லை. செல்வராஜை அடித்ததாக சொல்லப்படும் தடியை நான் போலீசாரிடம் எடுத்து கொடுத்தேனா என்றால் நான் எனது மாடுகளை கட்டுவதற்கு போய்விட்டேன். நான் மாடுகளை கட்டுவதற்காக சென்றதால் என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது என்றால் நான் சம்பவம் நடந்த பிறகுதான் மாடுகளை கட்டச் சென்றேன். நான் சம்பவம் நடந்ததாக வழக்கிற்காக

பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. கீதாவும், செல்வராஜும் எனது பக்கத்து காட்டில் இருப்பதால் பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. ஆஜர் எதிரி நான் சொல்லும் நாளில் அந்த காட்டிற்கு வரவில்லை என்றால் சரியல்ல. நான் காவல்துறைக்கு சம்பவம் நடந்ததாக எதுவும் எழுதிக் கொடுக்கவில்லை.

**<u>மறுவிசாரணை</u> – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கைரேகை/கையொப்பம் செய்யப்பட்டது.

(ஒம்.).XXXX,
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.